**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC No. 637 / 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW : 7** |
| **Name** | **:** | **திரு. கணேசன்** |
| **Father's Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.04.2026**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் அப்பன் திருப்பதி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்து, கடந்த 31.10.2018ம் தேதி பணிநிறைவு பெற்று, தற்போது திருப்பாலை RMS அவன்யூவில் வசித்து வருகிறேன். கடந்த 05.08.2012ம் தேதி காலை 10.00 மணிக்கு நான் ஊமச்சிகுளம் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளராகப் பணியில் இருந்த போது, நிலைய மனு எண்.49/12ஐ பார்யிட்டு, 06.08.2012ம் தேதி 17.45 மணிக்கு ஊமச்சிகுளம் காவல் நிலைய குற்ற எண்.665/2012 பிரிவுகள் 147, 366 இதச ஆக வழக்கு பதிவு செய்தேன். புகார் மனு அதசாஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. **முதல் தகவல் அறிக்கை அதசாஆ.3 ஆகும்.** பின்னர் அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து குற்றவியல்

நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். வழக்கின் ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

புகாரில் உள்ள சங்கதிகள் உண்மையானவையா என்று நான் விசாரிக்கவில்லை. 05.08.2012ம் தேதி காலை 10.00 மணிக்கு புகார்தாரர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தபோது, நான் காவல்நிலையத்தில் தான் இருந்தேன். புகார்தாரர் அளித்த புகார் மனுவை தலைமை காவலர் கருணாகரன் பெற்று மனு ரசீது கொடுத்து, அது என் பார்வைக்கு வந்த பின்னர் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். வழக்கு நாட்குறிப்பில், புகார் மனுவின் நகல் உள்ளது. அந்த நகலில் " இன்று 05.08.2012ம் தேதி 10.00 மணிக்கு இந்த மனுவைப் பெற்று, இரசீது எண்.49/2012ன் படி இரசீது கொடுத்தும், சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்" என்று தலைமை காலர் கருணாகரன் எழுதியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் உள்ள அசல் புகார் மனுவில், " இன்று 05.08.2012ம் தேதி 10.00 மணிக்கு இந்த மனுவைப் பெற்று, இரசீது எண்.536/2012ன் படி இரசீது கொடுத்தும், சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இரசீது எண். 536 என்று whitnerஆல் அழிக்கப்பட்டு மேல்திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதை நீங்கள் திருத்தினீர்களா என்றால் இல்லை. நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் போது, இரசீது எண். 49 என்று இருந்ததா அல்லது 536 என்று இருந்ததா என்றால் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த போது, இரசீது எண்.49/2012 என்று தான் இருந்தது. நான் முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்யும் போது அதிலும் 49/2012 என்று தான் நான் குறிப்பிட்டேன். ஆனால் அதிலும் over writing செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதை நான் செய்யவில்லை. 05.08.2012ம் தேதி காலை 10.00 மணிக்கு, புகார் வந்தவுடன் முதல் தகவல் அறிக்கை முறையாக பதிவு செய்து, நீதிமன்றத்திற்கு அனுப்பியிருந்தால் இந்த அடித்தல் திருத்தல் வந்திருக்காது என்றும் முதல் தகவல் அறிக்கையில் ஏற்பட்ட கால தாமதம் ஏற்பட்டதை சரி செய்வதற்காக இரசீது எண் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த உடனேயே புகார்தாரருக்கு நகல் கொடுக்க வேண்டும் என்பது காவல் நிலையாணையின் படி ஒரு கடமை என்றால் சரிதான். இந்த வழக்கில் புகார்தாரருக்கு முதல் தகவல் அறிக்கையின் நகல் வழங்கப்பட்டதா இல்லையா என்றால் நான் கொடுக்கவில்லை. அவ்வாறு நகல் கொடுக்காததற்கு குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால் புகார் மனு பெற்ற அன்றைய தினம் நான் வெளி அலுவலலில் இருந்தேன். அதனால் புகார் பெற்ற அன்றைய தினமே நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை. வழக்கு பற்றி ஏற்கனவே ஒரு புகார் பெறப்பட்டது என்றும் அதில் குற்றத்திற்கான ஆக்கக் கூறுகள் காணப்படவில்லை என்றும், பின்னிட்டு புகார் மனு தயார் செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், அதனால் தான் இரசீது எண் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும் அதனால் தான் முறையாக புகார்தாரருக்கு நகல் கொடுக்கவில்லை என்றும் வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருந்தும் தலைமை காவலர் வழக்கு பதிவு செய்யவில்லை என்றும் ஒருதலைபட்சமாக பின்னிட்டு ஆலோசனை செய்து புகார் மனு தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் நகலை இணைத்து, காவல் கண்காணிப்பாளர், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் ஆவண காப்பகத்திற்கு ஒரு நகலும்

அனுப்பி வைப்போம் என்றால் சரிதான். மேற்படி நகல்களை வாங்கிப் பார்க்கும் போது அவற்றில் திருத்தம் செய்யப்பட்டிருந்தால் அது எங்களால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும் அவற்றில் திருத்தம் இல்லை என்றால் எங்கள் கட்டுப்பாட்டை மீறி திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.09 17:00:35 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை